**திருத்தப்பட்ட தேதி :ஆகஸ்டு 12023 ,**

**விற்பனையின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்:**
**துணை நிறுவனங்க / அல்லது இணை / மற்றும் IFFளால் செய்யப்படும் பொருட்களின் அனைத்து விற்பனைகளும் – IFF ன் விற்பனைக்கான நிலையான வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை மற்றும் அவைகளால் நிர்வகிக்கப்படுபவை குறிப்பிட்ட பொருட்கள் . சரக்குகளின் விற்பனைக்கு பொருந்துகின்ற எழுத்துப்பூர்வ / எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருக்கும் விஷயங்களுக்கு மட்டும் அத்தகைய ஒப்பந்தத்தின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் பொருந்தும் .**

## இன்டர்நேஷனல் ஃபிளேவர்ஸ் &ஃபிராக்ரன்சஸ் இன்க்

## விற்பனையின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள்

**பொருந்துநிலை :இன்டர்நேஷனல் ஃபிளேவர்ஸ் & ஃபிராக்ரன்சஸ் இன்க் மற்றும் / அல்லது அதன் துணை நிறுவனங்கள் / இணை நிறுவனங்களால்) தனியாகவோ அல்லது கூட்டாகவோ , பொருந்தக்கூடிய வகையில் ,"விற்பனையாளர் ("செய்யப்படும் பொருட்களின் அனைத்து விற்பனை செயல்பாடுகளும் ")வாங்குபவர் ("விற்பனைக்கான இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு") விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் (" உட்பட்டது மற்றும் அவற்றால் நிர்வகிக்கப்படுகிறது அத்தகைய பொருட்களின் விற்பனை தொடர்பாக விற்பனையாளரால் வழங்கப்பட்ட அத்தகைய பொருட்கள் மற்றும் ஏதேனும் சேவைகள் அல்லது தகவல்கள் ஆகியவை கூட்டாக ,"சரக்குகள் பொருட்கள்/ .("எனப்படும்வாங்குபவரால் வழங்கப்படும் எந்தவொரு கொள்முதல் ஆர்டரின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது எந்தவொரு கொள்முதல் ஆணைகளையும் வாங்குபவர் கட்டுப்படுத்துகின்ற அம்சங்கள் அல்லது விற்பனையாளரது ஏற்பு நிலையை கட்டுப்படுத்துகின்ற அம்சம் உட்பட ,எந்தவொரு மற்றும் அனைத்து பிற வரையறைகளை விற்பனையாளர் இதன் மூலம் நிராகரிக்கிறார் . வாங்குபவரின் கொள்முதல் ஆணை அல்லது அத்தகைய பிற வரையறைகள் ஒரு ஆஃபராக ,எதிர் ஆஃபராக அல்லது வேறு விதமாக கருதப்படுகின்றன அல்லது இந்த வரையறைகள் மற்றும்**

நிபந்தனைகளிலிருந்து அவைகள் மாறுபடுகின்றன அல்லது அதற்கு கூடுதல் அம்சங்களாக கருதப்படுகின்றன என எதுவாக இருப்பினும் , விற்பனையாளர் இதன் வழியாக அந்த வரையறைகள் அனைத்தையும் நிராகரிக்கிறார் .இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை பெற்றுக்கொண்ட உடன் முடிந்தவரை விரைவாக இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை வாங்குபர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று எழுத்துப்பூர்வமாக விற்பனையாளருக்கு வாங்குபவர் அறிவிக்கை செய்தாலொழிய , இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை வாங்குபவர் ஏற்றுக்கொண்டிருப்பதாக கருதப்படும் மற்றும் இதற்கு மாறாக ஏதும் இருந்த போதிலும் ,வாங்குபவரது ஏற்புநிலை அல்லது சரக்குகளைப் பயன்படுத்துவது ,விற்பனைக்கான இந்த நிபந்தனைகளுக்கு வாங்குபவரின் ஒப்புதலாகவே கருதப்படும் .இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ,வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையில் நிகழும் பொருட்களுக்கான ஒவ்வொரு விற்பனை பரிவர்த்தனையின் ஒரு அங்கமாகவும் ,அதற்குள் இணைக்கப்பட்ட ஒரு அம்சமாகவும் கருதப்படுகின்றன .விற்பனையாளரும் வாங்குபவரும் குறிப்பிட்ட பொருட்களின் விற்பனையைக் குறிப்பாக நிர்வகிக்கும் ஒரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தை செயலாக்கம் செய்திருந்தால் ,அப்போது அத்தகைய குறிப்பிட்ட பொருட்களைப் பொறுத்து மட்டுமே ,அத்தகைய ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அத்தகைய எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தால் உள்ளடக்கப்படும் அளவிற்கு பொருந்தும் ,மேலும் அத்தகைய செயல்படுத்தப்பட்ட எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் இடம்பெறாத எந்தவொரு விஷயங்களும் இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வருமானால் ,இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அதற்குப் பொருந்தும் .மற்றும் அத்தகைய எழுத்துப்பூர்வ ஒப்பந்தத்தில் அத்தகைய அளவிற்கு கூடுதல் சேர்க்கைகளாக அவைகள் இருக்கும் .

ஆர்டர் உறுதிப்படுத்தல்கள் :எழுத்துப்பூர்வ ஆர்டர் உறுதிப்படுத்தல் வழியாக விற்பனையாளரால் ஏற்றுக்கொள்ளப்படும் வரை வாங்குபவரின் சரக்குகளுக்கான ஆர்டர்கள் விற்பனையாளரை கட்டுப்படுத்தாது .எனினும் ,ஆர்டர் உறுதிப்படுத்தலை விற்பனையாளர் வழங்கவில்லை எனில் ,அப்போது ஆர்டர் செய்த சரக்குகளின் உற்பத்தியை விற்பனையாளர் தொடங்குகின்றபோது

விற்பனையாளரால் ஆர்டரை ஏற்றுக்கொண்டது நிகழ்வதாக கருதப்படும் .

விலை :ஆர்டர் உறுதிப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விலை மற்றும் நாணயம் / கரன்சி பொருட்களின் விற்பனைக்காக வாங்குபவருக்கும் விற்பவருக்கும் இடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விலை மற்றும் நாணயமாகக் கருதப்படும் .ஒன்றுக்கும் மேற்பட்ட பல அல்லது எதிர்கால டெலிவரிகள் இருக்குமானால் ,அத்தகைய டெலிவரிகளுக்கான விலை மற்றும் நாணயம் ,அத்தகைய டெலிவரிகள் தொடர்பான அடுத்தடுத்த ஆர்டர் உறுதிப்படுத்தல்)களில் (குறிப்பிடப்பட்டுள்ளபடி எந்த நேரத்திலும் விற்பனையாளரால் திருத்தம் செய்யப்படுவதற்கு உட்பட்டவை .

விலைப்பட்டியல்கள் மற்றும் பேமென்ட் :பணம் செலுத்துதல் / விற்பனையாளர் சரக்குகளை அனுப்பும் போது அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் வாங்குபவர் மீது விலைப்பட்டியலை )இன்வாய்ஸ் (உருவாக்க விற்பனையாளர் உரிமைத்தகுதி கொண்டிருப்பார் .ஆர்டர் உறுதிப்படுத்தல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் செலுத்தல் வரையறைகளின்படி விற்பனையாளருக்கு பணம் செலுத்துவார் .அத்தகைய பணம் செலுத்தல் வரையறைகளின் கீழ் உரிய நேரத்தில் செலுத்தப்படாத தொகை மீதும் ,பொருந்துகிற சட்டத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச வட்டித்தொகை வரை விற்பனையாளர் வாங்குபவர் மீது வட்டியை விதிக்கலாம் .அனைத்து பணம் செலுத்தல்களும் செட்-ஆஃப் ,கழித்தல்கள் அல்லது எதிர் உரிமைகோரல்கள் இல்லாமல் செய்யப்படும் .அத்தகைய பணம் செலுத்தல்கள் வரையறைகளின் படி உரிய நேரத்திற்குள் செலுத்தப்படாத எந்தவொரு தொகையையும் சேகரிப்பது தொடர்பாக விற்பனையாளரால் செய்யப்பட்ட அனைத்து கட்டணங்கள் மற்றும் செலவுகள் )உச்சவரம்பு இல்லாமல் ,வழக்கறிஞரின் நியாயமான கட்டணங்கள் , நிபுணர் கட்டணங்கள் மற்றும் பிற சட்டக் கட்டணங்கள் உட்பட ( விற்பனையாளருக்கு வாங்குபவர் காலதாமதமின்றி திருப்பிச் செலுத்த வேண்டும் .

வரிகள் :விற்பனையாளர் மற்றும் வாங்குபவரால் எழுத்துப்பூர்வமாக வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி) ,i ( பொருட்களுக்கான விற்பனையாளரின் விலையானது சரக்குகள் அல்லது அதன் டெலிவரி தொடர்பாக எந்தவொரு அதிகார வரம்பின்

கீழ் பொருந்தக்கூடிய வரி ,தீர்வை ,கலால் வரி ,விதிப்பு அல்லது கட்டணம்) மதிப்புக் கூட்டப்பட்ட வரிகள் உட்பட (எதையும் உள்ளடக்காது ,மேலும்) ii (அத்தகைய அனைத்து வரிகளையும் செலுத்துவதற்கு வாங்குபவர் பொறுப்பாவார்) .பொருட்களின் விற்பனையின் காரணமாக விற்பனையாளரால் செலுத்தப்பட வேண்டிய வருமான வரிகள் நீங்கலாக(, சரக்குகளின் விற்பனை , உற்பத்தி அல்லது போக்குவரத்தின் மீது விற்பனையாளர் ஏதேனும் அதிகார அமைப்பிற்கு) தேசிய ,மாநில அல்லது உள்ளூர் அளவிலான (செலுத்த அவசியமாக இருக்கின்ற தீர்வைகள் ,கலால் வரி ,வரிகள் அல்லது கட்டணங்கள்) மதிப்புக்கூட்டப்பட்ட வரிகள் உட்பட ( அனைத்தையும் செலுத்துவதற்கு வாங்குபவரே பொறுப்புடையவர் .

டெலிவரி வரையறைகள் :விற்பனையாளர் ,டெலிவரி வரையறைகளின்படி ஆர்டர் உறுதிப்படுத்தல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது வாங்குபவருக்கு விற்பனையாளரால் எழுத்துப்பூர்வமாக வேறுவிதத்தில் வழங்கப்பட்டபடி டெலிவரி செய்யும் இடத்தில் சரக்குகளை டெலிவரி செய்வார் .

டெலிவரி தேதி :ஆர்டர் உறுதிப்படுத்தலில் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்க்கப்படும் டெலிவரி தேதியில் சரக்குகளை டெலிவரி செய்ய வணிகரீதியாக நியாயமான முயற்சிகளை விற்பனையாளர் மேற்கொள்வார் ;எனினும் , அத்தகைய எதிர்பார்க்கப்படும் டெலிவரி தேதி ,ஒரு உத்தேச மதிப்பீடு மட்டுமே ;மற்றும் டெலிவரியில் தாமதம் ஏற்பட்டால் வாங்குபவரால் ஏற்படும் எந்த இழப்புக்கும் விற்பனையாளர் பொறுப்பேற்க மாட்டார் .ஆர்டர் உறுதிப்படுத்தல் ஆவணத்தில் டெலிவரி தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் , விற்பனையாளர் பொருத்தமானதாகக் கருதும் நேரத்தில் பொருட்கள் டெலிவரி செய்யப்படும் .

உரிமைத்துவ மாற்றுகை மற்றும் பொருட்களின் இழப்பு இடர்வாய்ப்பு :ஆர்டர் உறுதிப்படுத்தல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருந்துகின்ற டெலிவரி வரையறைகளின்படி டெலிவரி செய்யப்படும் நேரத்தில் பொருட்களின் இழப்பிற்கான இடர்வாய்ப்பு வாங்குபவருக்கு மாறிவிடும் .இந்நேரத்தில் பொருட்களின் மீதான உரிமைத்துவமும் வாங்குபவருக்கு

மாறிவிடும் ;இருப்பினும் ,மேற்கூறப்பட்டவாறு இருந்தபோதிலும் , வாங்குபவரால் செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் இருப்பதன் காரணமாக டெலிவரி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பது மற்றும் / அல்லது தவறாக பொருட்களுக்கான டெலிவரி நிராகரிக்கப்பட்டிருப்பது அல்லது வாங்குபவரால் ஏற்கப்படாமல் இருப்பது ஆகிய நிலைகளில் வாங்குபவரின் தனிப்பட்ட இடர்வாய்ப்பு மற்றும் செலவின் பேரில் அப்பொருட்கள் விற்பனையாளரது பொறுப்பில் வைக்கப்படும் மற்றும் சேமித்து வைக்கப்படும் .

ஆர்டர் உறுதிப்படுத்தல்களை இடைநிறுத்தல் செய்தல் அல்லது ரத்து செய்தல் :விற்பனையாளருக்கு) i (ஆர்டர் உறுதிப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை அல்லது டெலிவரியின் எந்தவொரு மேலதிக செயல்பாட்டையும் வாங்குபவருக்கு எழுத்துப்பூர்வ அறிவிப்பை வழங்குவதன் வழியாக இடைநிறுத்தல் செய்வதற்கு உரிமை உண்டு ,(ii) உரிய நேரத்தில் பணம் செலுத்தப்படாத எந்தவொரு டெலிவரி செய்யப்பட்ட பொருட்களையும் திரும்ப அனுப்புமாறு கோருவது மற்றும் அவைகளை மறுசுவாதீனம் செய்வதற்கான உரிமை) மற்றும் பொருட்களைத் திரும்பப்பெறுவது தொடர்பான அனைத்து செலவுகளுக்கும் பணம் செலுத்துமாறு / ஈடுசெய்யுமாறு கோரும் உரிமை ,((iii) மாற்று அல்லது கூடுதல் இழப்பீடுகளைக்கோரும் அதன் உரிமைக்கு பாதிப்பில்லாமல் எந்தவொரு கொள்முதல் ஆர்டர் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆர்டர் உறுதிப்படுத்தல் ஆவணத்தை ரத்து செய்தல் ,(a ( விற்பனையாளருக்கான கடப்பாடுகள் எதையும் வாங்குபவர் மீறுவாரானால் ,குறிப்பாக வாங்குபவர் செலுத்த வேண்டிய எந்தவொரு பணத்தொகையும் நிலுவையில் இருந்தால் அல்லது ஆர்டர் உறுதிப்படுத்தலின் கீழ் வாங்குபவர் அவரது கடப்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாது என்று விற்பனையாளர் நியாயமாக நம்பினால் மற்றும் வாங்குபவர் அத்தகைய ஆர்டர் உறுதிப்படுத்தலின் கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான பிணையை வழங்கத் தவறுவாரானால் அல்லது) b ( வாங்குபவரின் எந்தவொரு சொத்துக்களும் ஜப்தி செய்யப்படுமானால் அல்லது வாங்குபவர் கடனை செலுத்த இயலாதவராக அல்லது திவாலானவராக ஆகிவிட்டால் அல்லது நிறுவனம் கலைக்கப்படுமானால்) மறுசீரமைப்பு நோக்கத்தைத் தவிர பிற காரணங்களுக்காக(, அல்லது வாங்குபவருக்கு எதிராக அல்லது அவரால் எந்தவொரு திவால் நடவடிக்கையும் தொடங்கப்படுமானால் அல்லது வாங்குபவரின் அனைத்து

சொத்துக்களுக்கும் அல்லது கணிசமான பகுதி சொத்துகளுக்கும் ஒரு அறங்காவலர் அல்லது பெறுநர் அல்லது நிர்வாகி நியமிக்கப்படுவாரானால் அல்லது தனக்கு கடன் வழங்கியவர்களின் நலனுக்காக பணத்தொகை எதையும் வாங்குனர் ஒதுக்கீடு செய்வாரானால் ,ஆர்டர் உறுதிப்படுத்தல்களை இடைநிறுத்தல் செய்ய அல்லது ரத்து செய்ய விற்பனையாளருக்கு உரிமைத்தகுதி இருக்கும் .இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளுள் ஒன்று நிகழுமானால் ,எந்தவொரு அடிப்படையிலும் வாங்குபவருக்கு எதிராக விற்பனையாளர் கொண்டிருக்கக்கூடிய இருக்கக்கூடிய அனைத்து உரிமைகோரல் தொகைகளும் உடனடியாக செலுத்தப்படக்கூடியதாக ஆகிவிடும் .இதில் ,விற்பனையாளருக்கு ஏற்பட்ட செலவுகள் மற்றும் நேரடி கட்டணங்களும் உள்ளடங்கும் .

வாரண்ட்டிகள் :ஷிப்மெண்ட் செய்யப்படும் நேரத்தில், அமலாக்கத்தில் உள்ள விற்பனையாளரின் நிலையான விவரக்குறிப்புகள் அல்லது நிலையான தயாரிப்புப்பொருள் விவரக்குறிப்புகளுக்கு அல்லது ஷிப்மென்ட் செய்யப்படும் நேரத்தில் விற்பனையாளராலும் மற்றும் வாங்குபவராலும் எழுத்துப்பூர்வமாக கையெழுத்திடப்பட்டு) ஏதேனும் இருந்தால் ( ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற இதுபோன்ற பிற அளவீடுகளுக்கு இணக்கமானதாக அப்பொருட்கள் இருக்கும் என்று விற்பனையாளர் உத்தரவாதம் அளிக்கிறார் ;இருப்பினும் ,இப்பொருட்கள் உயிரியல் சார்ந்த பொருட்களாக இருக்கலாம்) அல்லது அதனை உள்ளடக்கியதாக) .(நொதிகள் மற்றும் உயிருள்ள நுண்ணுயிரிகள் உட்பட (மற்றும்) i (விவரக்குறிப்புகள் / அளவீடுகளுக்கு இணக்கமாக இருத்தல்) எ.கா., செல் எண்ணிக்கை ,திறனளவு ,தூய்மை மற்றும் / அல்லது செயல்பாட்டு நிலைகள் (தொகுதிக்கு தொகுதி மாறுபடலாம் ,(ii) சரக்குகளுக்கான எந்தவொரு விவரக்குறிப்பும் ஒரு வரம்பாக அல்லது மொத்தமாகவோ குறிப்பிடப்படலாம்) அதாவது, எந்தவொரு தனிப்பட்ட கூறுகளையும் போல இல்லாமல்(, மற்றும்) iii ( விற்பனையாளரின் கட்டுப்பாட்டை விட்டு பொருட்கள் வெளியேறியதற்குப் பிறகு பொருட்களின் ஷிப்பிங் ,கையாளல் , சேமிப்பு அல்லது பயன்பாட்டின் விளைவாக அளவீடுகளைப் பூர்த்தி செய்ய அப்பொருட்கள் தவறுமானால் வாரண்ட்டியை விற்பனையாளர் மீறியிருப்பதாக கருதப்படமாட்டார். எழுத்துப்பூர்வமாக கையொப்பமிடப்பட்ட ஆவணத்தில் விற்பனையாளரும் வாங்குபவரும் வேறுவிதமாக

ஒப்புக்கொண்டிருந்தாலொழிய ,வாங்குபவருக்கு அறிவிப்பு அல்லது அவரது ஒப்புதல் இல்லாமல் சரக்குகள் மற்றும் / அல்லது தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கான செயல்முறைகள் மற்றும் / அல்லது அமைவிடங்கள் தொடர்பாக பொருட்களுக்கான விவரக்குறிப்புகளில் மாற்றங்களைச் செய்வதற்கான உரிமையை விற்பனையாளர் கொண்டிருப்பார் .விற்பனையாளர் இதன் மூலம் , ,எந்தவொரு நோக்கத்திற்காகவும்வணிகத்தன்மை அல்லது மீறல் அல்லாதவற்றிற்கான தகுதிக்கான எந்தவொரு உத்தரவாதமும் / வாரண்ட்டியும்உட்பட பொருட்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட , அல்லது மறைமுகமான எந்தவொரு மற்றும் அனைத்து பிற வாரண்ட்டிகளையும் /உத்தரவாதங்களையும் விற்பனையாளர் நிராகரிக்கிறார் மற்றும் அதற்கான பொறுப்பு தனக்கு இல்லை என்று அறிவிக்கிறார் .

ஆய்வு ;இணக்கமற்ற பொருட்களுக்கான உரிமைகோரல்கள் : அளவீடுகளுக்கு இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்த , வாங்குபவர் உடனடியாக சரக்குகளை / பொருட்களை ஆய்வு செய்ய வேண்டும் .வாங்குபவரின் அனைத்து உரிமைகோரல்களும் ,வரம்பு இல்லாமல் ,வாரண்ட்டி மீறல் அல்லது அளவு / எண்ணிக்கை குறைவிற்கான உரிமைக்கோரல்கள் உட்பட ,உரிமைகோரலின் தன்மை மற்றும் அதன் விளைவாக பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் சேதங்களின் அளவு ஆகியவற்றை விவரித்து எழுத்துப்பூர்வமாக செய்யப்பட வேண்டும் ;மேலும் வாங்குபவர் பொருட்களை வாங்கிய பத்து) 10 (வணிக நாட்களுக்குள் உரிமைக்கோரல்கள் விற்பனையாளரால் பெறப்பட வேண்டும் .மேலே குறிப்பிட்டுள்ளபடி உரிய நேரத்திற்குள் செய்யப்படாத உரிமைகோரல்கள் மற்றும் வாங்குபவரால் சரக்குகள் மறுவிற்பனை செய்யப்பட்ட பிறகு அல்லது ஏதேனும் செயல்முறை / பதப்படுத்தல், கையாளல் அல்லது பிற பொருட்கள் சேர்க்கை அல்லது கலவை, மற்றொரு தயாரிப்புடன், எந்த வடிவத்திலும் மற்றும் அதற்குள்ளும் ஒருங்கிணைக்கப்படுதல் ஆகிய செயல்பாடுகள் என்றென்றும் தடைசெய்யப்பட்டதாக, செல்லாததாக மற்றும் வாரண்ட்டியிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக இருக்கும் .மேற்கூறியவை இருந்தபோதிலும், வெளிப்படையாகத் தெரியக்கூடிய போக்குவரத்து சேதங்கள், சரக்குகள் டெலிவரி ஆன உடனேயே விற்பனையாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும் . இணக்கமற்ற பொருட்கள் என்று உரியவாறு நிரூபிக்கப்பட்ட பொருட்களைப் பொருத்தவரை, அத்தகைய இணக்கமற்ற

பொருட்களை விற்பனையாளர் அவரது சொந்த செலவில் மாற்றித் தரவேண்டும் அல்லது சரிசெய்து வழங்க வேண்டும் அல்லது வாங்குபவரால் அதற்காக செலுத்தப்பட்ட தொகையை, அத்தகைய நிரூபிக்கப்பட்ட இணக்கமின்மையின் அளவிற்கு ஏற்றவாறு வாங்குபவருக்கு திருப்பித் தர வேண்டும் .விற்பனையாளரின் முன் எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் சரக்குகளை திருப்பி அனுப்பக்கூடாது .

பொறுப்பு / கடப்பாடு வரம்பு :எந்தவொரு நிகழ்விலும், இந்த ஒப்பந்தத்தின் ஏதேனும் மீறல், ஏதேனும் சரக்குகளை வழங்காமை அல்லது ஏதேனும் சரக்குகளை வழங்குதல் தொடர்பான எந்தவொரு மற்றும் அனைத்து உரிமைகோரல்களிலிருந்தும் எழும் அனைத்து இழப்பீடுகளுக்கும் பொருட்களை வாங்குபவருக்கான விற்பனையாளரின் ஒட்டுமொத்த பொறுப்பு / கடப்பாடு என்பது, இதற்கான நடவடிக்கையின் வடிவம், ஒப்பந்தம், TORT )கவனக்குறைவு உட்பட(, கண்டிப்பான பொறுப்பு, சட்டம் அல்லது வேறு எந்தவொரு விதமானதாக இருக்கின்றபோதிலும், எதற்காக இழப்பீடுகள் கோரப்படுகிறதோ அந்த குறிப்பிட்ட பொருட்களுக்காக வாங்குபவரால் விற்பனையாளருக்கு செலுத்தப்பட்ட மொத்த விலை தொகைக்கு மிகைப்பட்டதாக இருக்காது .எந்தவொரு வகையிலும் பதப்படுத்தப்பட்ட மூன்றாவது தரப்பு நபரின் தயாரிப்போடு சேர்க்கப்பட்ட எந்தவொரு பொருட்களுக்கும் உரிமைக்கோரிக்கை ஏதும் அனுமதிக்கப்படாது .விற்பனையாளரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியால் முன்கூட்டியே ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தாலொழிய எந்தவொரு உரிமைகோரல்களுக்கும் பணம் அல்லது செலவிட்ட தொகையை வழங்குவது அனுமதிக்கப்படாது .கூடுதலாக, பொருந்தக்கூடிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவிற்கு, இந்த ஒப்பந்தத்தின் எந்தவொரு மீறல், பொருட்கள் டெலிவரி செய்யப்படாமை அல்லது வழங்கப்படாமையின் காரணமாக உருவாகக்கூடிய மறைமுகமான, தற்செயலான, பின்விளைவாக ஏற்படுகின்ற தண்டனை காரணமாக, முன்மாதிரியான அல்லது பன்மடங்காக்கப்பட்ட இழப்புகள் அல்லது இழந்த இலாபங்கள், இழந்த வருவாய்கள் அல்லது வணிக நற்பெயர்

இழப்பு) ஒவ்வொரு நேர்விலும் நேரடியான அல்லது பின்விளைவான சேதங்கள் என எப்படி வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் ( ஆகியவற்றுக்கான எந்தவொரு உரிமைகோரலையும் வாங்குபவர் கைவிடுகிறார் / உரிமையை விலக்கிக் கொள்கிறார் . பொருந்தக்கூடிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவிற்கு, இந்த ஒப்பந்தத்தின் எந்தவொரு மீறல், பொருட்கள் டெலிவரி செய்யப்படாமை அல்லது வழங்கப்படாமையின் காரணமாக எழுகின்ற ஒப்பந்தம் சாராத உரிமைக் கோரிக்கைகளை வலியுறுத்துவதில்லை என்று வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார் அல்லது அதற்கான உரிமையை கைவிடுகிறார்; இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள், அத்தகைய உரிமை விலக்கிக்கொள்ளலை செயலாக்கம் செய்வதற்கு தேவைப்படக்கூடிய வாசகங்களை உள்ளடக்குவதாக கருதப்படும்.

தகவல் ;தயாரிப்பு பணி முழுமையடைந்த வாங்குபவருக்கான , – பொருட்கள்வாங்குபவருக்கான பொருளில் அதனைப் பயன்படுத்துவது தொடர்பான தகவலை விற்பனையாளர் வாங்குபவருக்கு வழங்கலாம் .இத்தகைய நிகழ்வுகளைப் பொறுத்தவரை ,பொருட்களை வாங்குபவர் பயன்படுத்துவது அல்லது அவரின் சந்தையாக்கல் அல்லது அந்தப் பொருட்களை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் எந்த வகையிலும் பொறுப்புள்ளவராக இல்லை என்பதை வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார் .பொருட்களைப் பயன்படுத்துகின்ற அனைத்து நிலைகளையும் ,சூழல்களையும் விற்பனையாளரால் முன்னதாகவே கணிக்க / எதிர்பார்க்க முடியாது என்பதை வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார் .எனவே ,வாங்குபவரின் நோக்கங்களுக்காக அப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் அதன் பொருந்து நிலையை தீர்மானிப்பதற்காக தனது சொந்த பரிசோதனைகளை மேற்கொள்ள வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார் .மேற்கூறியவற்றோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் ,வாங்குபவரின் தயாரிப்பு பொருட்கள் தொடர்பாக உரிமைகோரல்களைத் தீர்மானிப்பதில் மற்றும்/அல்லது உரிமைகோரல்களைச் செய்வதில் வாங்குபவருக்கு உதவுவதற்காக விற்பனையாளர் சரக்குகள்) அல்லது அதில் அடங்கியுள்ள பொருட்கள் (தொடர்பான தரவுகளைக் கொண்ட ஆவண நகல்களை விற்பனையாளர் வழங்கலாம் அல்லது அதை எங்குப் பெறுவது என்று வாங்குபவருக்கு வழிகாட்டலாம் .விற்பனையாளர் அத்தகைய தரவை அவ்வப்போது வழங்கக்கூடும் என்றாலும் ,வாங்குபவர் கீழ்கண்டவற்றைப் புரிந்துகொண்டு அவற்றை ஒப்புக்கொள்கிறார்

)i (விற்பனையாளர் அத்தகைய தரவைப் பொறுத்து எந்த உத்தரவாதங்களையும் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்குவதில்லை) இதன் வழியாக உத்தேசிக்கப்படுகின்ற பரிவர்த்தனைகள் தொடர்பான வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது வாங்குபவருக்கு வழங்கப்பட்ட வேறு எந்த ஆவணம் அல்லது எழுத்துப்பூர்வ செய்தி எதுவாக இருந்தாலும்) .(ii (அத்தகைய தரவின் எந்தவொரு பயன்பாட்டுடன் தொடர்புடையதாக அனைத்து இடர்களும் இருக்கக்கூடும் என்பதை வாங்குபவர் அங்கீகரிக்கிறார்) .iii ( வாங்குபவர் ,வாங்குகின்ற பொருட்கள் தொடர்பாக ,அத்தகைய தரவுகளின் மதிப்பீடு மற்றும் எந்தவொரு உரிமைகோரல்களின் )பொதுவான சந்தைப்படுத்தல் ,உடல்நலம் ,சிகிச்சை ,செயல்திறன் மற்றும் வேறுபிற உரிமைகோரல்கள் உட்பட ( சட்டப்பூர்வத்தன்மையை தீர்மானிப்பதற்கும் வாங்குபவர் மட்டுமே பொறுப்பாவார் ,(iv) மற்றும் அத்தகைய தரவுகளின் வழங்கல் அல்லது பயன்பாடு தொடர்பான எந்தவொரு மற்றும் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் விற்பனையாளரை வாங்குபவர் ,இதன் மூலம் விற்பனையாளரை விடுவிக்கிறார் மற்றும் என்றென்றைக்கும் இக்கடமைப் பொறுப்பிலிருந்து அவரை விலக்கிவிடுகிறார்) .v ( வாங்குபவர் ,அத்தகைய தரவுகள் அனைத்தையும் விற்பனையாளரின் ரகசியத் தகவலாகக் கருதுவார் . விற்பனையாளரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதியின்றி எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் அத்தகைய தரவை வெளிப்படுத்தமாட்டார் .மேலும்) vi (தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை தொடர்பாக அல்லது அதன் காரணமாக உருவாகின்ற எந்த மற்றும் அனைத்து இழப்புகள் , செலவுகள்) வரம்பு இல்லாமல் ,வழக்கறிஞர்களின் நியாயமான கட்டணங்கள் உட்பட (மற்றும் மேலும் உரிமைகோரல்கள் ஆகியவற்றிலிருந்து விற்பனையாளருக்கு விளையக்கூடிய தீங்கிலிருந்து பாதுகாக்கவும் மற்றும் இழப்பினை ஈடுசெய்யவும் வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார் .

மறுவிற்பனை அல்லது பிற வழிமுறையில் பொருட்களை வழங்குதல் கூடாது :விற்பனையாளரின் வெளிப்படையான எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் இதன் கீழ் வாங்கப்பட்ட பொருட்களை) மாதிரிகள் வழியாகவோ அல்லது வேறுவிதமாகவோ (மறுவிற்பனை செய்யவோ அல்லது

வேறுவிதமாக வழங்கவோ கூடாது .இதற்கு மாறாக எது எவ்வாறிருப்பினும் ,இந்த பத்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனது கடப்பாட்டை வாங்குபவர் மீறுவாரானால் ,அவருக்கு அறிவிக்கை வழங்குவதன் பேரில் எந்தவொரு கொள்முதல் ஆர்டரையும் ரத்து செய்வதற்கு விற்பனையாளருக்கு உரிமை உண்டு .

இரகசியத்தன்மை :வாங்குபவருக்கு விற்பனையாளரால் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் மற்றும் பொருட்களும் )சரக்குப் பொருட்கள் தொடர்பாக சரக்குகள் ,ஆர்டர் உறுதிப்படுத்தலின் அல்லது வேறுபிற ஏற்பாடு அல்லது ஆவணங்களின் வரையறைகள் உட்பட (இரகசியமானவை மற்றும் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி விற்பனையாளரின் எழுத்துப்பூர்வமான முன்ஒப்புதல் இல்லாமல், எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும்) வாங்குபவரின் துணை நிறுவனங்கள் தவிர (வாங்குபவரால் வெளிப்படுத்தப்படக்கூடாது அல்லது வாங்குபவரால் அல்லது அதன் துணை நிறுவனங்களால் பொருட்களை வாங்குவது மற்றும் / அல்லது பயன்படுத்துவதைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் அதை பயன்படுத்தக்கூடாது.

அறிவுசார் சொத்துரிமை :இப்பொருட்களிலிருந்து அல்லது அது தொடர்பாக எழும் அனைத்து அறிவுசார் சொத்துரிமைகளும் விற்பனையாளரின் பிரத்யேக சொத்தாகும் .சரக்குகளின் விற்பனையானது ,பொருள்களுடன் தொடர்புடைய அறிவுசார் சொத்துரிமையின் கீழுள்ள எந்தவொரு உரிமத்தையும் அல்லது பிற உரிமைகளையும் உட்குறிப்பாகவோ அல்லது வேறுவிதமாகவோ தெரிவிக்காது ;மேலும் சரக்குகளைப் பயன்படுத்துவதன் காரணமாக எந்தவொரு அறிவுசார் சொத்து மீறலின் அனைத்து இடர்களையும் வாங்குபவர் தன்னுடையதென்று வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்கிறார் .இது ,ஒருமையாகவோ அல்லது பிற பொருட்களுடன் இணைந்தோ அல்லது எந்தவொரு பதப்படுத்தல் / செயலாக்க நடவடிக்கையிலோ இருக்கலாம்.

பகுப்பாய்வு செய்யக்கூடாது :விற்பனையாளர் தனது எழுத்துப்பூர்வ முன் ஒப்புதலை அளித்திருந்தால் தவிர ,வாங்குபவர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ,பொருளின் வேதிப்பொருள் கலவை அல்லது கட்டமைப்பிற்காக அதன் மீது எந்தவொரு பகுப்பாய்வையும் அல்லது எந்தவொரு நோக்கத்திற்காகவும் சரக்குகளின் எந்தவொரு நகல் தயாரிப்பையும் செய்யக்கூடாது .மேலும் ,தலைகீழ் உருவாக்கல் ,

மறுஉருவாக்கல் அல்லது வேறுவிதத்தில் விற்பனையாளரால் வழங்கப்பட்ட பொருட்களின் மூலஆதாரத்தை அடையாளம் காண, வாங்குபவர் முயற்சிக்கக்கூடாது.

ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதைத் தடுக்கும் எதிர்பாரா சூழ்நிலைகள் (Force Majeure :(உச்சவரம்பு ஏதுமின்றி கடவுளின் செயல்கள் ,இயற்கைப் பேரழிவுகள் ,நெருப்பு ,வெள்ளம் ,பூகம்பங்கள், தொற்றுநோய்கள் ,வெடிப்புகள் ,கலவரங்கள் ,போர்கள், பயங்கரவாதம் ,உள்நாட்டுக் கலவரங்கள் ,கடலின் அபாயங்கள், தொழிலாளர் பிரச்சனைகள்) எ.கா .வேலைநிறுத்தங்கள் ,மெதுவாக பணியாற்றல் அல்லது நாசவேலை(, இயந்திர செயலிழப்புகள், அரசின் நடவடிக்கைகள் ,செயலற்ற நிலைகள் அல்லது தடைகள் உட்பட ,மூலப்பொருட்கள் அல்லது பயன்பாட்டு அம்சங்களின் பற்றாக்குறை ,விற்பனையாளருக்கு விற்பனையாளரின் சப்ளையர்கள் அல்லது துணை ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்பட்ட பொருட்களில் குறைபாடுகள் அல்லது டெலிவரி தாமதம் மற்றும் / அல்லது போக்குவரத்து நிறுத்தங்கள் ஆகியவை உட்பட, விற்பனையாளரது நியாயமான கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்ட சூழ்நிலைகளினால் ஏற்படுகின்ற செயல்பாடு தாமதம் அல்லது செயல்படுத்த தவறுவதனால் விற்பனையாளருக்கு எந்த கடப்பாடும் ஏற்படாது .மேலே விவரணை செய்யப்பட்டுள்ள எதிர்பாரா நிகழ்வுகள் உட்பட ,ஆனால் ,அவை மட்டுமல்லாமல் ,வேறு எந்த காரணத்திற்காகவும் ,பொருட்களுக்கான மொத்த தேவையை சப்ளை செய்ய விற்பனையாளரால் இயலவில்லை எனில், கிடைக்கப்பெறுகின்ற பொருட்களை எந்தவொரு அல்லது அனைத்து வாங்குபவர்களுக்கும் ,அதுமட்டுமின்றி விற்பனையாளரின் துறைகள் மற்றும் பிரிவுகளுக்கும் ,நியாயமானது மற்றும் நடைமுறைக்கு உகந்தது என்று கருதப்படுவதன் அடிப்படையில் விற்பனையாளர் வினியோகிக்கலாம் ;இதன் விளைவாக ஏற்படக்கூடிய செயல்படத் தவறியமைக்கான எந்தவொரு கடப்பாடும் இல்லாமல் இதை செய்யலாம் .

தனியுரிமை / அந்தரங்கம் காத்தல் :இந்த பரிவர்த்தனையின் ஒரு பகுதியாக ,விற்பனையாளர் வாங்குபவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்கலாம் ,பயன்படுத்தலாம் மற்றும் வெளிப்படுத்தலாம் .இதில் நிறுவனத்தின் பெயர் ,முகவரி ,வங்கி

மற்றும் கடன் தகவல் மற்றும் பெயர் ,தொலைபேசி எண் ,மின்னஞ்சல் முகவரி மற்றும் வாங்குபவரின் நிறுவனம் மற்றும் வாங்குபவரின் ஒப்பந்ததாரர்களில் பணியாற்றும் நபர்களின் பிற தொடர்பு விவரங்கள் ஆகியவை அடங்கும் .பரிவர்த்தனையை நிறைவு செய்வதற்காகவும் மற்றும் விற்பனையாளரின் அந்தரங்கம் பேணல் அறிக்கையில்https) ://www.iff.com/ (privacyவிவரணை செய்யப்பட்டவாறும் ,தனது துணை நிறுவனங்கள் மற்றும் தேர்வு செய்திருக்கின்ற குறிப்பிட்ட மூன்றாம் தரப்பினருடனும் இத்தகைய தனிப்பட்ட தகவல்களை விற்பனையாளர் பகிர்ந்து கொள்ளலாம்:

சட்டங்களுக்கு இணக்கமாக செயல்படுதல் :சரக்குகள் / பொருட்கள் தொடர்பான பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணக்கமாக செயல்படுவது தனது பொறுப்பு என்று வாங்குபவர் ஒப்புக்கொள்கிறார், இலஞ்சம், ஊழல், பணமோசடி ஆகியவை தொடர்பான அனைத்து பொருந்தும் சட்டங்களும் ஒழுங்குமுறைகளும் மட்டுமல்லாமல் இன்னும் பலவும் இதில் உள்ளடங்குகின்றன. குறிப்பாக, பொருட்களுக்கு பணம் செலுத்தப் பயன்படுத்தப்படும் அனைத்து நிதிகளும் சட்டப்பூர்வமானவை என்றும், பொருந்துகின்ற பணமோசடித் தடுப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் இருந்து பெறப்படாது என்றும் வாங்குபவர் தெளிவுபடுத்துகிறார்.

வர்த்தகக் கட்டுப்பாடு சட்டங்கள்: வாங்குபவர், விற்பவர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள், பிரதிநிதிகள், முகவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள், அவர்கள் வணிகம் செய்யும் பல்வேறு நாடுகளில் அமலிலுள்ள வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கு உட்பட்டவர்கள் ஆவர். வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கு முழுமையாக இணங்கி செயல்பட விற்பனையாளர் உறுதிபூண்டுள்ளார் .எல்லா நேரங்களிலும் செயல் நடவடிக்கைகளுக்குப் பொருந்தும் வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை வாங்குபவரும், விற்பவரும் கடைப்பிடிக்க வேண்டும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நோக்கங்களுக்காக, "வர்த்தகக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் "என்பவை, இறக்குமதி, மாற்றுகை அல்லது ஏற்றுமதி கட்டுப்பாடுகள், வர்த்தகக் கட்டுப்பாடுகள், வர்த்தகத் தடைகள்,

பொருளாதாரத் தடைகள், உரிமங்கள் / அனுமதிகள், வரிகள் / தீர்வைகளுக்குப் பணம் செலுத்துதல் அல்லது சர்வதேச வர்த்தகக் கட்டுப்பாடு தொடர்பான அனைத்து பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை குறிக்கிறது மற்றும் உள்ளடக்குகிறது. )i) சில நாடுகள், தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுடனான வணிக நடவடிக்கைகள், (ii) நாட்டின் எல்லைகளைக் கடந்து தயாரிப்புகளின் பரிமாற்றம், அவற்றின் இறுதிப் பயன்பாடு, தொழில்நுட்பம் அல்லது தொழில்நுட்பம் தரவு ஆகியவற்றை மாற்றுவது அல்லது) iii) சர்வதேச புறக்கணிப்பில் பங்கேற்பு அல்லது ஒத்துழைப்பு ஆகியவற்றை நிர்வகிக்கின்ற, தடை செய்கின்ற, மட்டுப்படுத்துகின்ற மற்றும் ஒழுங்குமுறைப்படுத்துகின்ற தடைகளுக்கான ஒழுங்குகளை / விதிகளைப் பின்பற்றுவது ஆகியவற்றையும் சட்டங்கள் என்ற இச்சொற்றொடர் குறிக்கிறது மற்றும் உள்ளடக்குகிறது.

இதரவை. விற்பனையாளர் அல்லது வாங்குபவர் தனக்கு இருக்கக்கூடிய ஏதேனும் உரிமையை செயல்படுத்தத் தவறினால், அது வேறு எந்த சந்தர்ப்பங்களிலும் பெற்றிருக்கக்கூடிய எந்தவொரு உரிமையையும் தள்ளுபடி செய்வதாகக் கருதப்பட மாட்டாது. விற்பனையாளர் எந்த நேரத்திலும் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் திருத்தலாம் அல்லது மாற்றலாம். முடிந்த போதெல்லாம், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஒவ்வொரு விதியும் பொருந்துகின்ற சட்டத்தின் கீழ் பயனுள்ள மற்றும் செல்லுபடியாகும் வகையில் விளக்கப்பட வேண்டும். இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகள் அல்லது விதிகள் செயல்படுத்த முடியாதவை என்று தகுதிவாய்ந்த அதிகார வரம்பைக் கொண்ட ஏத்ஜேனும் நீதிமன்றம் தீர்மானிப்பதானது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை செல்லுபடியாக்காது, மேலும் அத்தகைய நீதிமன்றத்தின் முடிவு செயல்படுத்த முடியாததாகக் கருதப்படுகின்ற பிரிவுகளை அல்லது விதிகளை முடிந்தவரை கட்டுப்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும்.

ஒப்படைப்பு :உரிமைமாற்றம் /விற்பனையாளரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதியில்லாமல் வாங்குபவர் அதன் உரிமைகளை பிறருக்கு

**ஒதுக்கீடு / உரிமை மாற்றம் செய்ய மாட்டார் அல்லது அதன் செயல்திறனை ஒப்படைக்கவோ மாட்டார் .**

**ஆங்கில பதிப்பு .இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கிலப் பதிப்பு எந்தவொரு மொழிபெயர்ப்பையும் விட மேலோங்கியதாக இருக்கும் .**

**பொருந்தும் சட்டம் மற்றும் அதிகார வரம்பு :இந்த வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் ,அதுகுறித்த சட்டங்களின் மோதல் நிலைகளின் கோட்பாடுகளுக்கான செயலாக்கத்தை வழங்காமல், ஆர்டரை உறுதிப்படுத்தும் ஆவணத்தை வழங்கிய விற்பனையாளரின் பிரதான தொழில் / வர்த்தக அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் அதிகார வரம்பைக் கொண்டிருக்கும் சட்டங்களால் நிர்வகிக்கப்படும் மற்றும் அதற்கேற்பக் கருதப்படும். சர்வதேச அளவில் பொருட்களின் மீது விற்பனைக்கான ஐக்கிய நாடுகள் சங்க ஒப்பந்தத்தின் திருத்தியமைக்கப்பட்டவாறு , ஷரத்துகளின் செயலாக்கம் / பயன்பாடு இதில் வெளிப்படையாக விலக்கப்பட்டிருக்கிறது .ஆர்டரை உறுதிப்படுத்தும் ஆவணத்தை வழங்கிய விற்பனையாளரின் பிரதான தொழில் / வர்த்தக அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் அதிகார வரம்பைக் கொண்டிருக்கும் நீதிமன்றங்கள் முன்பாக மட்டுமே வாங்குபவர் அல்லது விற்பனையாளரால் தொடங்கப்படும் எந்தவொரு வழக்குகள் ,நடவடிக்கைகள் மற்றும் செயல்முறைகள் நடத்**தப்படும் .